# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 21 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | ஒக்ரோபர் 19, 2020




## கைக்குண்டுடன் கச்சாயில் இளைஞன் கைது

சாவகச்சேரி - கச்சாய் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச் சாட்டில் இளைஞன்

03

## காய்ச்சல்–வயிற்றுப்போக்கு: 10 மாதக் குழந்தை பலி!
### யாழில் சம்பவம்

காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்குடன் யாழ். பண்டத்தரிப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்திய

03



## கைதானார் ரிஷாட் 27 வரை விளக்கமறியல்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதவான் நீதிமன்றில் இன்று பிற்பகல் அவர் முற்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியூதீன், இன்று (19) காலை தெஹிவளையில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இடம்பெயர்ந்த வாக்காளர்களை புத்தளத்திலிருந்து மன்னாருக்கு அழைத்து சென்றமையின் ஊடாக

03



## எல்லாம் முடிந்துவிட்டது
### "800" பற்றிப் பேச ஒன்றுமில்லை

'800' படம் பற்றிப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் முடிந்து விட்டது என்று நடிகர் விஜய் சேதுபதி தெரிவித்தார்.

முத்தையா முரளிதரன் வாழ்கை வரலாற்றுப் படத்தில் விஜய் சேதுபதி நடிக்க ஒப் பந்தமானதிலிருந்து தமிழ கத்தில் பெரும் சர்ச்சை உரு வானது. அதிலிருந்து விஜய் சேதுபதி விலக வேண்டும் என்று

03




## வடக்கு, கிழக்கில் பௌத்தத்தை மேம்படுத்தவோ ஆயுதப் படைகளுக்கோ நிதி வழங்க வேண்டாம்

### மோடிக்கு விக்கி கடிதம்

"பௌத்த மத மேம்பாட்டுக்காக இந்திய வழங்கிய 15 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் அந்த நிதி ஊடான பயனைப் பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையை விதிக்கவேண்டும்.

03



## கொரோனா தகவல்களை அறிய 1999 அறிமுகம்

கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை, 1999 என்ற துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் அறிய முடியுமென, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித் துள்ளார்.

03

## கொரோனா தோற்றுக்குள்ளான பருத்தித்துறை பேருந்து நடத்துனர் இரணாவில் வைத்தியசாலையில் அனுமதி



இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை பேருந்து நடத்துனருக்கு கோரோனா தொற்று உள்ளமை நேற்றிரவு உறுதி செய்யப் பட்ட நிலையில் அவர் சிலாபம் - இரணவில கோவிட் - 19 சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவரை மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அமைக் கப்பட்ட கோவிட் -19 சிகிச்சை நிலை யத்தில் அனுமதிக்க தீர்மானிக்கப்பட் டது. எனினும் அங்கு சிகிச்சை நிலை யம் அமைக்கும் பணி இன்று மாலைக் குள் நிறைவு செய்யப்படாத நிலையில் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கோவிட் -19 நோய் சிகிச்சை நிலையம் மருதங்கேணி பிரதேச வைத்திய சாலையில் அமைக்கப்படுகிறது.

மருதங்கேணி பிரதேச மருத்துவமனை கோவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு முன்பாக இன்று காலை முதல் பொலி ஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## இன்றும் 87 பேருக்கு கொரோனா தொற்று




இலங்கையில் இன்றும் 87 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. இன்று முற்பகல் பரிசோதனைகளின்படி 47 பேருக்கும் பிற்பகல் கிடைத்த பரிசோதனை முடிவுகளின்பிரகாரம் மேலும் 40 பேருக்கும் கோரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இரா ணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்த19 பேர் மற்றும் மினுவங்கொட ஆடை கைத்தொழிற்சாலை ஊழியர் களுடன் தொடர்பில் இருந்த 21 பேரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அதனடிப்படையில் மினுவங்கொட கொத்தணியில் இதுவரையில் 2,162 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

# ஊடகவியலாளர் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல்



















யாழில் படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று (19) அனுஸ்டிக்கப்பட்டது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ்.ஊடக அமையத்தில் மதியம் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. நிமலராஜனின் திருவுருவ படத்திற்கு அவரது சகோதரன் சுடரேற்றினார் ,அதனை தொடர்ந்து யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மலர்மாலை அணிவித்தார், அதனையடுத்து வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ச.சஜீவன் , ஊடகவியலாளர்கள், மலரஞ்சலி செலுத்தினார்கள்.

போர் சூழலில் யாழில் இருந்து , துணிவாக ஊடகப் பணி யாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன் அவர்கள். இவர் பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி , ராவய போன்றவற்றில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் கடந்த 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுத தாரிகள் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். அதன் போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர் , வீட்டின் மீது கைக் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர். அதன் போது வீட்டில் இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தனர்.

குறித்த படுகொலை சம்பவம் நடைபெற்று 20 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை விசாரணைகள் எதுவும் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

# கிணற்றில் விழுந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சிறுவர்கள் பலி!



கலேவல, ரன்வெதியாவ பகுதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சிறுவர்கள் வயலுக்கு நீர் இறைப்பதற்காக தோண்டப்பட்டிருந்த கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இன்று காலை முதல் காணாமல் போயிருந்த நிலையில் குறித்த மூன்று சிறுவர்களும் அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

12 மற்றும் 15 வயதுடைய சிறுமிகள் இருவரும் 7 வயதுடைய சிறுவன் ஒருவனுமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கலேவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு- ஆமர் வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்ப உறுப்பினர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஊடக பேச்சாளர் டி.ஐ.ஜி அஜித் ரோஹண மேலும் கூறியுள்ளதாவது, "கடந்த சில நாட்களாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருந்தார்.

எனவே, அவருடன் நெருங்கி பணிப்புரிந்த ஏனைய 16 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிப்புரிந்த பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அப்பெண்ணுடன் ஆடைத்தொழிற்சாலையில் பணி புரிந்தவர்கள், நெருங்கியவர்கள் என பலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

குறித்த கொரோனா வைரஸ் தொற்றுக்கு சாதாரண பொதுமக்கள் மட்டுமன்றி வைத்தியர்கள், ஏனைய உயர் பதவிகளில் உள்ள பலரும் இலக்காகியுள்ளனர்

இந்நிலையிலேயே ஆமர் வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியமையினால். அவருடன் இணைந்து கடமையாற்றிய ஏனைய 16 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் பெரும் வீழ்ச்சி!

2020 ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 22 வீதம் குறைந்து 3.1 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் பதிவாகிய மிகக் குறைந்த ஏற்றுமதி வருமானம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆடை ஏற்றுமதியில் 3.9 அமெரிக்க டொலர் என்ற அதிகூடிய வருமானம் கடந்த 2019ஆம் ஆண்டு பதிவாகியிருந்தது.

இலங்கையில் இருந்து அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதியில் 22.15 வீதம் மற்றும் 1.4 பில்லியன் டொலரும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் 21.36 வீதம் மற்றும் 1.3 பில்லியன் அமெரிக்க டொலரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஆடை ஏற்றுமதி வீழ்ச்சிக்கு உலக நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸ் பெருந்தோற்றே பிரதாக காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்தினாலை விமர்சித்த பெண் கைது

பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை குறிப்பிட்டு இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமாக சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் பத்தரமுல்ல பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் சமூக ஊடகங்களில் காணொளி ஒன்றை வெளியிட்டு இவ்வாறு இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமான கருத்துக்களை தெரிவித்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# ரி-81 ரக துப்பாக்கி, தோட்டாக்கள் கிணற்றில் இருந்து மீட்பு

கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து ரி-81 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் மீட்கப் பட்டு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாம்பல்திடல் பகுதியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் இருந்த கிணற்றில் ஆயுதங்கள் இருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய திங்கட்கிழமை(19) மாலை அவ்விடத்தை முற்றுகை இட்டனர்.

இதன் போது குறித்த கிணற்றில் இருந்து குழாய் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலை யில் ரி-81 ரக துப்பாக்கி மற்றும் ரவைக் கூட்டுடன் 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட ஆயுதம் தொடர்பில் எந்தவொரு சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உடல்நலப் பிரச்சினை
## 3 மாத பரோல் கேட்டு நளினி கடிதம்

சித்தா மற்றும் ஆயுர்வேத சிகிச் சைகளை எடுத்துக் கொள்வதற்காக மூன்று மாத பரோல் கேட்டு உள்துறைச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் நளினி.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நளினி மூன்று மாத பரோல் கேட்டு தமிழக உள்துறைச் செயலாளருக்குத் திடீரென கடிதம் அனுப்பியிருக்கிறார். இதுகுறித்து, நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி கூறுகையில்,

“30 ஆண்டுகளாக சிறைத்தண் டனை அனுபவித்துவரும் நளினிக்கு உடலில் பல்வேறுப் பிரச்னைகள் ஏற்பட்டுள்ளது.

ரத்தத்தில் ‘ஹீமோகுளோபின்’ குறைவாக இருக்கிறது. பல் வலி யாலும் அவதிப்படுகிறார். கண்புரை நோயாலும் பார்வைத்திறன் குறைந் திருக்கிறது. வயிற்று வலி போன்ற



நோய்களாலும் தொடர்ச்சியாகத் துன்பப்படுகிறார். எனவே, சிறை விதிகளைத் தளர்த்தி மனிதாபிமான அடிப்படையில் 90 நாள்கள் பரோல் கேட்டு வேலூர் சிறைக் கண் காணிப்பாளர் மூலமாக உள்துறைச் செயலாளருக்குக் கடிதம் அனுப்பி யுள்ளார்.

பரோல் கிடைக்கும் பட்சத்தில், சித்தா மற்றும் ஆயுர்வேத சிகிச்சை களை எடுத்துக் கொள்ள முடிவு செய்துள்ளார். கோரிக்கை மனு நிராகரிக்கப்பட்டால், நவம்பர் முதல் வாரத்தில் சென்னை உயர்நீதிமன் றத்தில் முறையிட உள்ளோம். லண்டனில் தங்கியிருக்கும் மகள் ஹரித்ராவுக்குத் திருமணம் செய்து வைக்க கடந்த ஆண்டு ஒரு மாத பரோலில் வெளியே வந்தார்.

மகள் ஹரித்ரா லண்டனிலிருந்து வராத காரணத்தினால், பரோல் காலம் முடிந்து மன வருத்தத்துடன் சிறைக் குத் திரும்பிவிட்டார். இதையடுத்து, நளினிக்கு மீண்டும் பரோல் கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் அவருக்கு கட்டாயமாக சிகிச்சைத் தேவைப்படுகிறது. மனிதாபிமான அடிப்படையில் நளினியின் மனுவை அரசு பரிசீலனை செய்து பரோல் வழங்க வேண்டும்” என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கு, கிழக்கில்...

இலங்கை ஆயுத படைகளுக்கு வழங்கப்படும் பயிற்சியின் ஊடாக தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை இந்தியா, மகிந்த ராஜபக்சவிடம் பெற்றுக்கொள்ளவேண்டும்”

இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

ஆங்கிலத்தில் வரையப்பட்ட அந்தக் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு

அண்மையில் எமது நாட்டின் பிரதமரிடம் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கேட்டுக் கொண்டமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் செயலானது எமது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களைக் கூட்டியுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் குறைபாடு களை நீங்கள் நன்கறிவீர்கள் என்று நம்புகின்றேன். அத்து டன் இலங்கை - இந்திய உடன்பாட்டையும் பதின் மூன்றாம் திருத்தச்சட்டத்தையும் நீங்கள் வெவ் வேறாகப் பகுத்துப் பார்த்திருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.

அண்மையில் திருமதி.வானதி ஸ்ரீனிவாசனின் தலைமைத்துவத்தின் கீழ் புதிய இந்திய ஃபோரத்தால் நடாத்தப்பட்ட “சூம்” வழிக் கலந்துரையாடலின் போது 1987ம் ஆண்டின் இலங்கை இந்திய உடன்பாட்டின் முழுமையான நடைமுறைப்படுத்தலானது எம் இருதரப்பாருக்கும் நன்மை பயக்கும் என்று கூறியிருந்தேன். என்னுடைய தமிழ்ப் பேச்சின் ஆங்கில மொழியாக்கத்தின் பிரதியொன்றை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

ஒரு சில விடயங்கள் உங்களின் பிரத்தியேகமான அவதானத்தைப் பெற வேண்டும்.

அண்மையில் இந்தியாவின் கொடையாகக் கொடுக்க உடன்பட்ட தொகையான 15 மில்லியன் டொலர் தொகையை இரு நாடுகளுக்கிடையிலான பௌத்த நட்புறவை மேம்படுத்தவும், பௌத்த சமய வணக்கஸ்தலங்களைக் கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும் மற்றும் தொல்பொருளியல் சம்பந்தமான கூட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முனையும் போது இலங்கையின் வடகிழக்கு தமிழரின் தாயகப் பிரதேசத்தில் அத் தொகையின் நலனைப் பாவிக்கக் கூடாதென்ற ஒரு உத்தரவாதத்தை இலங்கைப் பிரதமர், மகிந்த ராஜபக்சவிடம் இருந்து பெற்றுக் கொள்வது உசிதமானது.

மேலும் இருதரப்பு ஆயுதமேந்திய படைகளின் கூட்டை வலுப்படுத்த வழங்கப்படும் உதவிகள் மற்றும் பயிற்சிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தையும் மகிந்த ராஜபக்சவிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். - என்றுள்ளது.

## எல்லாம் முடிந்துவிட்டது...

அரசியல் கட்சித் தலைவர்கள், இலங்கைத் தமிழர்கள், இயக்குநர்கள் பாரதிராஜா, சீனு ராமசாமி, சேரன் உள்ளிட்ட பலரும் வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இந்தச் சர்ச்சைகளைத் தொடர்ந்து முத்தையா முரளிதரன் வெளியிட்ட அறிக்கையில், தனது சுயசரிதைப் படத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு விஜய் சேதுபதிக்கு வேண்டுகோள் விடுத்தார். அந்த அறிக்கையை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து விஜய் சேதுபதி “நன்றி வணக்கம்” என்று மட்டும் குறிப்பிட்டார். இந்த ட்வீட்டினால் விஜய் சேதுபதி நடிக்கிறாரா, விலகிவிட்டாரா என்ற குழப்பம் நீடித்தது.

இந்நிலையில் தமிழக முதல்வர் பழனிசாமியை சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடிகர் விஜய் சேதுபதி இன்று சந்தித்தார்.

முதல்வரின் தாயார் தவுசாயம்மாள் காலமான நிலையில் அவரது மறைவுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

முதல்வரின் தாயார் படத்துக்கு விஜய் சேதுபதி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். பின்னர் முதல்வரிடம் 2 நிமிடம் அமர்ந்து பேசி துக்கம் விசாரித்து தனது ஆறுதலைத் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.

முதல்வரின் வீட்டுக்கு வெளியே காருக்காக காத்திருந்த விஜய் சேதுபதியிடம் செய்தியாளர்கள் ‘800’ பயோபிக் குறித்துக் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு விஜய் சேதுபதி பதில் அளிக்கையில், “நன்றி வணக்கம் என்ற பதிவு, முடிந்துவிட்டது என்று அர்த்தம். இனிமேல் அதைப் பற்றிப் பேசுவதற்கு ஒன்றுமில்லை” என்று தெரிவித்தார்.

‘800’ படத்திலிருந்து விலகிவிட்டீர்களா என்ற கேள்வியை மீண்டும் செய்தியாளர்கள் எழுப்பினார்கள். அப்போது விஜய் சேதுபதி, “அனைவருக்கும் புரிந்துவிட்டது தலைவா. எல்லாம் முடிந்துவிட்டது” என்று கூறிவிட்டுக் கிளம்பிச் சென்றார்.

## காய்ச்சல்...

சாலையில் அனுமதிக்கப்பட்ட 10 மாத குழந்தை உயிரிழந்துள்ளது.

இளவாலை - உயரப்புலம் பகுதியைச் சேர்ந்த தனீஸ்வரன் தம்பதிகளின் அக்‌ஷயன் என்ற 10 மாத ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளதாக இளவாலை பொலிஸார் தெரி வித்திருக்கின்றனர்.

நேற்று முன் தினம் குழந்தைக்கு காய்ச்சலுடன் கூடிய வயிற்றுப் போக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து குழந்தைக்கு வீட்டில் பரசிடமோல் மாத்திரைகளை வழங்கியுள்ளனர். எனினும் காய்ச்சல் குணம் அடைய வில்லை.

இதையடுத்து நேற்றுகாலை பண்டத்தரிப்பு பிர தேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளமை சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. எந்த வகையான காய்ச்சல் காரணமாக குழந்தை உயிரிழந்தது என்பது குறித்து கண்டறியப்படாத நிலையில்

குறித்த குழந்தையின் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் இறப்பு விசாரணையினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண டிருந்ததுடன்,

உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்திரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## கைக்குண்டுடன்...

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் வாள் வெட்டு சம்பவங் களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவர் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு நேற்று இரகசிய தகவல் கிடைத்துள்ளது. பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் குறித்த வீட்டினை சுற்றிவளைத்து தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 31 வயதுடைய இளை ஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸ ார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையில் குறித்த இளைஞன் வவுனியா பேருந்து நிலையத்தில் சாதாரன ஊழியராக பணியாற்றுவதாகவும் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் பிரதான சந்தேக நபராக தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்த னர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கொரோனா தகவல்களை...

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், வைரஸ் தொற்று ஏற்பட்டால் தமது குடும்ப அங்கத்த வர்களுக்கு அத்தொற்று பரவாமலிருக்க கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகள் என்பவற்றை இதன்மூலம் அறிய முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்பான ஏதேனும் அறிகுறிகள் இருப்பதை உணர்ந்தால், துரிதமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளவும், தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியுமென, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி துரித இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சேவைகளைப் பெற முடியும் என்பதுடன், 24 மணிநேரமும் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கைதானார்...

அரச நிதியை முறைக்கேடாக பயன்படுத்தியதாக தெரிவித்து பதியுதீனை கைது செய்ய சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதையடுத்து கடந்த சில நாட்களாக 6 பொலிஸ் குழுக்கள் அமைத்து தேடப்பட்டும் அவர் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் ரிஷாட் பதியுதீன் 6 நாட்களுக்குப்பின் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா பரவிய விதத்தை பகிரங்கப்படுத்த முடியாது



மினுவங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா கொத்தணி எவ்வாறு பரவியது என்பது குறித்து சில தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அவை உறுதிப்படுத்தப்படும் வரை அவற்றைப் பகிரங்கப்படுத்த முடி யாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மினுவங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்று பரவிய காலத்தில் சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்று இருக்கவில்லை என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

எனவே நிச்சயமாக வெளிநாட்டில் இருந்து வந்தவர்களாலேயே கொரோனா பரவியிருக்க வேண்டும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.



# மணிரத்னத்துடன் இணையும் கௌதம் மேனன்

மணிரத்னம் தயாரிப்பில் உருவாகி வரும் 'நவரசா' என்ற வெப் தொடரில் இயக்குனர் கௌதம் மேனன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார்.

தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனரான மணிரத்னம் அடுத்ததாக 'நவரசா' என்ற வெப் தொடரை தயாரித்து வருகிறார்.

9 தொடர்கள் கொண்ட இந்த வெப் தொடரை கார்த்திக் நரேன், கார்த்திக் சுப்புராஜ், கே.வி. ஆனந்த், பிஜாய் நம்பியார், பொன்ராம், சித்தார்த், அரவிந்த்சாமி உட்பட 9 இயக்குனர்கள் இயக்குகின்றனர்.

இந்த வெப் தொடரின் மூலம் நடிகர்கள் சித்தார்த், அரவிந்த்சாமி ஆகியோர் இயக்குனர்களாக அறிமுகமாகிறார்கள்.

சூர்யா, விஜய் சேதுபதி, பார்வதி, சினேகா, ஜெய் ஆகியோர் இந்த வெப் தொடரில் நடிக்கின்றனர்.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். ரவி வர்மன் ஒளிப்பதிவு பணிகளை கவனிக்கிறார். இந்நிலையில், இந்த வெப் தொடரில் இயக்குனர் கௌதம் மேனனும் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் கவுதம் மேனன் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

# கொரோனா மூன்றாவது அலையின் ஆரம்பம் வெளிநாடாக இருக்கலாம்

இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையின் ஆரம்பம் வெளிநாடாக இருக்கலாம் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கந்தகாடு கொரோனா கொத்தணி தொடர்பில் இறுதியாக ஓகஸ்ட் மாதம் இனங்காணப்பட்டதாகவும் அதனடிப்படையில் இந்நாட்டில் சமூகத்திற்கு இடையில் கொரோனா இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு சிலர் வருகை தந்ததாகவும் கடற்படை நடவடிக்கைகளுக்காக வருகை தந்த 6 பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்.பல்கலையில் அமைக்கப்பட்ட நவீன ஆய்வு மையத்தொகுதியை திறக்க நடவடிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில், ஜெய்க்கா செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட விவசாய ஆய்வுகள் மற்றும் பயிற்சிக்கான ஆய்வுமையக் கட்டடத் தொகுதி எதிர்வரும் 31 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் இதன் கட்டட மற்றும் அமைப்பு வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், திறப்பு விழா ஒழுங்கமைப்பில் காணப்பட்ட இழுபறி நிலையினால் மிக நீண்ட காலமாகப் பாவனைக்கு விடப்படாமல் இருந்து வந்தது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டத்தின் கீழ் 1.6 பில்லியன் ஜப்பானிய ஜென் (இலங்கை ரூபாயில் 2.2 பில்லியன்) பெறுமதிக்கு, கட்டடங்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் நவீன விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

கட்டுமானப் பணிகள் கடந்த வருடம் நிறைவு பெற்ற பின்னரும், பாவனைக்கு விடாதமை குறித்துக் கவலையடைந்த ஜப்பானிய அரசாங்கம், அதனை விரைவில் திறந்து பாவனைக்கு விடுமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அழுத்தம் கொடுத்ததையடுத்து, இந்தக் கட்டடத் தொகுதியை எதிர்வரும் 31 ஆம் திகதி திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவுக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தனிகர் அகிரா சுகியமா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

# 20 தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்க கோரிக்கை



இவ்வாரம் நடைபெறவுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்குமாறு எதிர்கட்சியின் பிரதான ஒருகிணைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றாளர் பல்வேறு பகுதிகளில் இருந்து இனங்காணப்பட்டு வருவதாகவும் கொரோனாவை கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் அடிப்படையில் கூட்டங்களை நடத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் நிலச்சரிவில் சிக்கிய பேருந்து: 16 பேர் சம்பவ இடத்திலேயே பலி

பாகிஸ்தானில் நிலச்சரிவில் சிக்கிய பேருந்தொன்று பள்ளத்தில் வீழ்ந்து குடைசாய்ந்ததில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் ராவல்பிண்டி நகரில் இருந்து கில்கிட் பால்டிஸ்தான் பிராந்தியத்தில் உள்ள ஸ்கர்து நகர் நோக்கி பயணிகள் பேருந்துச் சென்றது. இதன்போது பேருந்தில் 20க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்தனர்.

இந்த பேருந்து கில்கிட் பால்டிஸ்தான் பிராந்தியத்தின் ரவுண்டோ நகரில் மலைப்பாங்கான வீதியில் சென்று கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத வகையில் அங்கு பாறைகள் உருண்டு நிலச்சரிவு ஏற்பட்டது.

இதன்போது பாறை ஒன்றின் மீது மோதிய பேருந்து வீதியோரம் உள்ள பள்ளத்தில் வீழ்ந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.




இந்த கோர விபத்தில் பேருந்தில் பயணம் செய்த ஓட்டுநர், 4 இராணுவ வீரர்கள் உட்பட 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் பலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.